பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 03 வியாழக்கிழமை (20.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 294

### அமைதி முயற்சிக்கான ஏது நிலையை உருவாக்க

# இலங்கைக்கான சகல உதவிகளையும் சர்வதேச நாடுகள் நிறுத்த வேண்டும்

## புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்



கிளிநொச்சி, செப்ரெம்பர் 20

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக, இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கும் சகல வகையான உதவிகளையும் சர்வதேச நாடுகள் நிறுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"தமிழ் நெற்" இணையத் தளத்திற்கு அவர் நேற்று அளித்த செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலிந்த தாக்குதல் நடவடிக்கையிலிருந்து தடுத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுமை காத்து வருகின்றனர். இத்தகைய ஒரு அரசுடன் இணைந்து அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது பயனற்றது என்பதை சர்வதேச நாடுகள் உணரவேண்டும்.

இலங்கைக்கு வழங்கும் ஒவ்வொரு உதவியும் திட்டமிட்ட வகையில் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர் தாயக நிலைப் பரப்பை அகதிகள் நிலமாக்கி, சிங்களக் குடியேற்றம் நடத்தப்படுகிறது.

இலங்கை அரசுக்கு வழங்கும் அனைத்து வகையான உதவிகளையும் நிறுத்தி அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இந்த வேண்டுகோளை விடுக்கிறோம்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆவது நாளாக சட்டத்தரணிகள் பணிப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,செப.20

குடாநாட்டில் சட்டத்தரணிகள் மேற்கொண்டுவரும் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

தமக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படும்வரை நீதிமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரிப்பதென குடாநாட்டுச் சட்டத்தரணிகள் முடிவு எடுத்துள்ளமை தெரிந்ததே.

இவர்களது கோரிக்கை தொடர்பாக இதுவரை உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாததையடுத்து பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால் அவர்கள் சமுகமளிக்க வேண்டிய வழக்குகள் வேறுதினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-50)

## யாழ். பல்கலைக்கழக மாணவர் 13 பேருக்கு உயிர் அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 13 பேரின் பெயர்கள் குறிப்பிட்டு, அவர்களுக்கு புலிகளுடன் தொடர்புகள் இருப்பதாகத் தெரிவித்து, அவர்களின் உயிர்களுக்கு உலை வைக்கப்படும் என அச்சுறுத்தும் துண்டுப் பிரசுரங்கள் யாழ். பல்கலைக்கழகங்களில் பல்வேறு பீடங்களின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன எனத் தெரியவருகின்றது.

'நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு' என்ற பெயரிலேயே இந்தத் துண்டுப் பிரசுரம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழக மாணவர் சபையுடன் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெயர்களே பெரும்பாலும் அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

புலிகளுடன் தொடர்புகளைப் பேணும் பெண்களுக்கு கிருஷாந்தி குமாரசுவாமி, ரஜினி போன்ற பெண்களுக்கு ஏற்பட்ட கதியே ஏற்படும் என்றும் அந்தப் பிரசுரங்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 2 1/2 மாதங்களில் ரூ. 3500 கோடிக்கு புதிய நோட்டுக்கள் அச்சிடப்பட்டன!

### நாடாளுமன்றில் ஐ.தே.கட்சி அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, செப். 20

தனக்கு ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அரசு கட்டுமட்டின்றி புதிதாக நாணயத் தாள்களை அச்சிட்டுத் தள்ளுகின்றது. கடந்த இரண்டரை மாத காலத்தில் மட்டும் சுமார் மூவாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவை அது புதிதாக அச்சிட்டிருக்கின்றது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

புதிதாக அச்சிட்ட அந்த நோட்டுகள் எங்கே? அவற்றுக்கு என்ன நடந்தது? - என்றும் ஐ.தே.கட்சி கேள்வி எழுப்பியிருக்கின்றது.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமே நேற்று நாடாளுமன்றில் இவ்விடயத்தை அம்பலப்படுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரித்திருத்த சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ ரீதியிலான தீர்வு முயற்சிக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்காது

### இலங்கைக்கான தூதுவர் றொபேட் ஓ பிளேக் தெரிவிப்பு



கொழும்பு, செப். 20

"பேச்சு மூலமான இணக்கப்பாடுகளின்றி இராணுவ ரீதியிலான தீர்வுக்கு அமெரிக்கா உள்ளிட்ட உதவி வழங்கும் நாடுகள் ஒருபோதும் இலங்கைக்கு ஒத்து ழைப்பு வழங்காது"

- இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் 50 லட்சம் டொலர் பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருள்களை இலங்கைக்கு அன்பளிப்பு செய்யும் வைபவம் நேற்றுப் பகல் உறுகொடவத்தை அரச களஞ்சியசாலையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர் கோவில் மோதலில் சிப்பாய் ஒருவர் மரணம்

கொழும்பு, செப்.20

நாகர் கோவில் படையினரின் முன்னரங்க நிலையில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 3 படைச் சிப்பாய்கள் காயமடைந்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# பஸில் எம்.பியாகப் பதவியேற்ற சமயம் நாடாளுமன்றில் நேற்று அமளி துமளி!

### சுலோக அட்டைகளுடன் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் அவரின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ரோஹண ராஜபக்ஷ நேற்றுப் புதிய நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டபோது சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. சபை நடவடிக்கைகளும் பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன. சபை ஒத்திவைக்கப்பட்ட நிலையிலும் ஆளும் கட்சி உறுப்பினர்களின் அட்டகாசம் ஓயவில்லை.

ஆளும்கட்சி உறுப்பினரான அமைச்சர் மேர்வின் சில்வா சபாநாயகரின் கடுமையான எச்சரிக்கைக்கும் கண்டனத்திற்கும் உள்ளானார்.

பஸில் ரோஹண ராஜபக்ஷ, சபாநாயகரின் முன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டிருந்தபோது எதிர் வரிசையில் ஐ.தே.க. உறுப்பினர்கள் '10% கொமிஷன்' எனப் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டு 'ராஜபக்ஷ சகோதர கம்[illegible] மட்டுமே பாக்கி. அவர் எப்போது வருவார்?' - எனக் கோஷமிட்டனர்.

ஆளும் கட்சிஉறுப்பினர்கள் மிகவும் மோசமான வார்த்தைகளால் தூஷித்துக் கொண்[illegible] சபை நடுவே வந்து எதிர்க்கட்சியினர் பக்கம் பாய்ந்தனர்.

ஆளும்கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டிய ஆளும்கட்சிக் கொரடாவே அவர்களைத் தூண்டிவிடும் வகையில் செயற்படுகின்[illegible] என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மீது சபாநாயகர் குற்றம் சாட்டினார்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றம் கூடியது.

சபாநாயகர் தனது ஆசனத்திற்கு வருவதற்கு முன் பஸில் ராஜபக்ஷ படைக்கல சேவிதரின் அருகில் போடப்பட்டிருந்த நாற்காலியில் வந்து அமர்ந்திருந்தார்.

அமைச்சர்கள் உட்பட அனைத்து ஆளு[illegible]

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இணுவில் மத்திய கல்லூரி ஆசானும்
பகுதித் தலைவருமான

## செல்லையா சிவகுமாரன்

*(காங்கேசன்துறை சாரணர் மாவட்ட உதவி மாவட்ட ஆணையாளர்)*

கடந்த ஆவணி மாதம் லண்டன் மாநகரில் நடைபெற்ற '21ஆவது உலக சாரணர் ஜம்போறியில்' பங்குபற்றி கல்லூரிக்கும் மாவட்டத்துக்கும் பெருமை தேடித் தந்துள்ள எங்கள் கல்லூரி ஆசான் செ.சிவகுமாரன் அவர்கள் நலமுடன் பல்லாண்டு வாழவும் அவரது சேவை மேலும் பெருகவும் வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**இணுவில் மத்திய கல்லூரி, இணுவில்.**


**விற்பனைக்கு**

ஸ்ருட்டி பெப் - பாவித்தது, ஸ்ருட்டிபெப் - 1 புதியது, 6"x 5" கட்டில் மெத்தையுடன் மற்றும் டேபில் டெனிஸ் மேசை - 2, 10 1/2" அலுமினிய பொடியுடன் புதிய இசுசு 150 வேன் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
*0777 271334*
*021 222 2485*
(64966)


# சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திருவிழா

**வேலணை,சாட்டி புனிதசிந்தாத்திரை மாதா திருவிழா 22.09.2007 சனிக்கிழமை வெகுசிறப்பாகக் கொண்டாடப்படும்**

- 21.09.2007 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நற்கருணை வழிபாடுகள் இடம்பெறும்.
- 22.09.2007 சனிக்கிழமை பெருவிழாத் திருப்பலிகள்:-
  - முதலாம் திருப்பலி காலை 7 மணிக்கு
  - இரண்டாம் திருப்பலி காலை 9.30 மணிக்கு

யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறும். தொடர்ந்து திருச்சொரூபபவனியும் ஆசீரும் இடம்பெறும்

  - மூன்றாம் திருப்பலி 12 மணிக்கு

இவ்வாண்டு இப்பெருவிழாவைக்கொண்டாட கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். இ.போ.ச. பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காலை 6.30 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையம், காலை 7 மணிக்கு யாழ்.மடத்தடி, பிரதான வீதி. காலை 7 மணிக்கு புனித நீக்கிலார் ஆலயம். யாத்திரிகர்கள் அடையாள அட்டையைக் கொண்டுவரவும். தனியார் சிற்றூர்தி ஒழுங்கு செய்து வருபவர்கள் பெயர், அடையாள அட்டை இலக்கங்களை ஒருதாளில் எழுதிவரவும். சோதனைச் சாவடி காலை 6மணிக்குத் திறக்கப்படும்.

**அருள்திரு. ஸ்ரனிஸ்லாஸ் பிலிப்**
அ.ம.தி. பரிபாலகர்,
சாட்டி சிந்தாத்திரை அன்னை திருத்தலம்,
வேலணை.

# சிறுவனின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.20

தென்மராட்சி தெற்கு, கோவிலாக் கண்டிப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் இருந்து சிறுவன் ஒருவனின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட் டது. அதே இடத்தைச் சேர்ந்த கலைச்செல்வநாதன் கலையரசன் என்பவரே மரணமானவராவார்.

இது தொடர்பாக பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேதபரிசோதனைக்காகக் கொண்டுசெல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.(அ-207)


**கோழிக்குஞ்சு விநியோகம்**

புறொயிலர் குஞ்சு பதிவுசெய்தவர்கள் 22.09.2007 சனிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் Prima சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சு பதிவு செய்யப்படும்.
**நல்லூர் பாம்** , *19, முருகேசர் லேன், நல்லூர்.*


# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
25 ★ 10 ★ 1924



மறைவு
20 ★ 09 ★ 2000

## அமரர் வேலன் பசுபதி

*(காங்கேசன்துறை - மார்புநோய் வைத்தியசாலை ஊழியர்)*

*உங்கள் மாறாத நினைவுச் சுமைகளாய்*
*நெஞ்சம் கனத்திட*
*விதியினை நொந்து தினம்*
*விழிநீரை சிந்திய படி*
*ஆண்டுகள் ஏழு கடந்தது பப்பா.*

த.மு.: கலாமன்ற வீதி, மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய்.
நி.மு.: வி.சி.சி.மாவிட்டபுரம். தெல்லிப்பழை.
**மனைவி, குடும்பத்தினர்.**
(64962)

# 75ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் 48ஆம் ஆண்டு திருமண நிறைவு நாளும்



## நாகநாதி தம்பாப்பிள்ளை

*அன்பின் பிறப்பிடமாய்*
*பாசத்தின் சிகரமாய்*
*எம் வாழ்வில் ஒளி ஏற்றி*
*வைத்த தெய்வம் நீ ஐயா*
*என்றென்றும் நீடூழி வாழ்க.*

சுன்னாகம் கிழக்கில் வசிக்கும் நாகநாதி - தம்பாப்பிள்ளை தனது 75ஆவது பிறந்தநாளை தனதில்லத்தில் இன்று (20.09.2007) வியாழக்கிழமை கொண்டாடுகிறார்கள். சந்நிதி முருகன் அருளுடன் வைரவர் துணையுடனும் இன்றுபோல் என்றும் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்:-

*அன்பு மனைவி, பிள்ளைகள்: திரு.திருமதி ஜெயரட்ணம் குடும்பம் (ஜேர்மனி), திரு.திருமதி சிவபாலன் குடும்பம் (ஜேர்மனி), திரு.திருமதி குணராசா குடும்பம் (சுவிஸ்), திரு.திருமதி மோகன் குடும்பம் (லண்டன்), திரு.திருமதி சுதாகரன் குடும்பம் (சுவிஸ்), திரு.திருமதி றயூகரன் குடும்பம் (பிரான்ஸ்).*

சுன்னாகம். (சி/53742)
தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

# கண்ணீர் அஞ்சலி



16.09.2007 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இயற்கை மரணமெய்திய எமது சங்கத்தின் முன்னாள் பொது முகாமையார்

## வேலாயுதபிள்ளை செல்லத்துரை

அவர்கள் கொழும்பில் உயிர் நீர்த்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், அழ்ந்த துயரமும் அடைகின்றோம். அன்னாரின் அத்மா சாந்தி அடைய அவரின் குடும்பத்தினருடன் நாமும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம். வேலணை. (64965)
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முன்னாள் பிரதி அதிபர்

## வேலுப்பிள்ளை நேசரட்ணம்


(B.Sc, PGDE) - முன்னாள் பிரதி அதிபர், யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை, பிரதி அதிபர் *யா/ஞானசாரியார்கல்லூரி, கரவெட்டி)*

அவர்கள் 17.09 2007 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் அத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், அசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.
யா/புலோலி மெ.மி.த.க.பா, புலோலி.
(64967)

# கண்ணீர் அஞ்சலி



தீவக வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர்
திருமதி ந.ஆனந்தகிருஷ்ணன்
அவர்களின் தாயார்
திருமதி காமலாம்பிகை தர்மலிங்கம்
அவர்கள் 18.09.2007 சிவபதமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு அவரைப் பிரிந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தீவக வலயக் கல்வி அலுவலகம்
தீவகம் - வேலணை.
(64988)

# மரண அறிவித்தல்கள்

## கதிர்த்தம்பி செல்லத்துரை (புத்டர்)

குப்பிளான் தெற்கு, வின்கிரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி செல்லத்துரை (புத்டர்) 15.09.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் சின்னம்மாவின் அன்பு கணவரும் யோகமலர், சிவபாலன் (லண்டன்), ஞானமலர் (பிரான்ஸ்), வசந்தமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மலிங்கம் (கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்), கலாவதி (லண்டன்), கனகசபை (லண்டன்), குமாரலிங்கம் (இ.போ.ச, சாரதி - யாழ்.சாலை), ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற ஆனந்தி, தங்கம்மா மற்றும் சவுந்தரம், சின்னத்துரை, அன்னப்பிள்ளை, சிற்றப்பலம், ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சின்னமணி மற்றும் ஐயாத்துரை, சின்னத்துரை, பொன்னுத்துரை (கனடா), அன்னலஷ்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் கடாகடம்பை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்வும்.

வின்கிரை, குப்பிளான் தெற்கு.
தகவல்: **ஐ.குமாரலிங்கம்** (இ.போ.ச, சாரதி).
(சி-53749)

## குலத்துங்கம் கோபி மாயகிருஷ்ணன் (மாயவன்)

சித்தன்கேணியைச் சேர்ந்த கோபி மாயகிருஷ்ணன் (மாயவன்) டென்மார்க்கில் 15.09.2007 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தயாழியின் அன்புக் கணவரும் அஸ்வினி, சந்தோஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி குலத்துங்கத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் இந்திரா தாமோதரம்பிள்ளையின் அருமை மருமகனும் கண்ணன் (கனடா), நந்தினி (டென்மார்க்), ரகு (லண்டன்), தர்ஷினி (கனடா), ராகவன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சூரியகுமார் (கனடா), விஜயகுமார், சுரேஷ்குமார் (லண்டன்), கேதீஸ்வரன் (டோகா) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

சித்தன்கேணி (64970)
தகவல்: **விஜயகுமார்** (விஜி - மைத்துனர்)

# மரண அறிவித்தல்கள்

## தியாகராசா விமலேஸ்வரி

மடத்தடி கிழக்கு வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தியாகராசா விமலேஸ்வரி நேற்று (19.09.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரைக் குருக்கள் தியாகராஜா அவர்களின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் காலஞ்சென்ற தங்கமுத்து தம்பதியரின் இளைய மகளும், சண்முகலிங்கம், நடராசலிங்கம், அருளானந்தபூபதி ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஜோதிமலர், செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கேதீஸ்வரி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்வும்

*மடத்தடி கிழக்கு வீதி, சாவகச்சேரி வடக்கு.* (சி-53752)
தகவல்: **குடும்பத்தினர்.**

## திருமதி செல்லத்துரை நாகேஸ்வரி



வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ். ஓட்டுமடத்தை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி செல்லத்துரை நாகேஸ்வரி நேற்று (19.09.2007) புதன்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம்-செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், வைரமுத்து சின்னாச்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிவபாக்கியம், பூபாலசிங்கம், பூபதி மற்றும் முத்துக்குமாரு, மதியாபரணம், செல்வராசா அகியோரின் அன்பு சகோதரியும், கதிர்காமநாதன், செல்வமனோகரி, பத்மநாதன், செல்வராணி, ஞானேஸ்வரி, செல்வமலர் ஆகியோரி ன் அன்புத் தாயும் பத்மாவதி, சோமசுந்தரம், கலாமதி, மகேந்திரன், சந்திரசேகரன், சிவகரன் ஆகியோரின் மாமியும், சுசீலாதேவி, நேசபவன், நேசகுமார், நேசசிறி, நேசராசா, சுதாஜினி, சுகந்தனி அகியோரின் பெரிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஓட்டுமடம் இல்லத்தில் இன்று (20.09.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓட்டுமடம் யாழ்ப்பாணம்.
தகவல்:
**சிவலிங்கம்** (தம்பி),
**சி.கிருபாகரன்** (பேரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிசியார் கல்லூரியில் 157 பேர் இரத்த தானம்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற இரத்ததான முகாமில் 157 பேர் இரத்ததானம் செய்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இ. சிவசங்கர் தெரிவித்தார்.

பத்திரிசியார் கல்லூரி இன்ரரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 13ஆம் திகதி இந்த இரத்ததான முகாம் இடம்பெற்றது.

பிரஸ்தாப இரத்ததான முகாமில் 18 ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் உட்பட 157 பேர் இரத்ததானம் செய்துள்ளனர்.

தேசிய மட்டத்தில் பாடசாலைகளில் நடைபெற்ற இரத்ததான முகாம்களில் அதிக கூடிய எண்ணிக்கை புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற முகாமிலேயே பதிவாகியுள்ளதாக வைத்திய கலாநிதி இ. சிவசங்கர் மேலும் தெரிவித்தார். (50)



இரத்ததான நிகழ்வின்போது...

# வடமராட்சியின் பல ஆரம்பப் பாடசாலைகளில் தொலைத்தொடர்பு வசதிகள் இல்லை

வடமராட்சியில் உள்ள ஆரம்பப் பாடசாலைகள் பலவற்றிற்கு தொலைத் தொடர்பு வசதிகள் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் அவசர தொடர்புகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சியில் ஐந்தாம் தரம் வரையான வகுப்புகளைக் கொண்டியங்கும் ஆரம்பப் பாடசாலைகள் பலவற்றிக்கும் கிராமப் பாடசாலைகள் சிலவற்றிற்கும் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இதனால் பாடசாலைத் தேவைகளுக்காக வலய அலுவலகத்துடனோ கல்வி உயர் அதிகாரிகளிடமோ உடனடியாகத் தொடர்புகளை ஏற்படுத்த முடியாத நிலை உள்ளது. இதன் காரணமாக நிர்வாகச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுவதுடன் மாணவர்களின் கற்றலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளிலும் பின்னடைவு ஏற்படுகின்றது என கல்விச் சமூகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விடயங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட பாடசாலைகளுக்கும் தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (202-155)

# நியாப் திட்ட அலுவலகங்களில் 32 பதவிகளுக்கு வெற்றிடங்கள்

## விண்ணப்ப இறுதிநாள் இன்று என அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 20

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு சமுதாய முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான சமூக ஜீவனோபாயத் திட்ட அலுவலகங்களில் பணியாற்றுவதற்கு 32 பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேலதிக திட்டப்பணிப்பாளர், சமூக அபிவிருத்தி நிபுணர், பிரதம உள்ளக ஆய்வாளர், சிரேஷ்ட தொழில்நுட்ப ஆய்வாளர், சிரேஷ்ட பொறியியலாளர், சிரேஷ்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டப் பொறியியலாளர், சிரேஷ்ட கணக்காய்வாளர், தொடர்பாடல் உத்தியோகத்தர், வழிநடத்தல் மதிப்பீடு செய்தல் உத்தியோகத்தர் -

முகாமைத்துவ தகவல் ஒழுங்குபடுத்தல் உத்தியோகத்தர், நிதி உத்தியோகத்தர், மதிப்பீடு செய்தல் உத்தியோகத்தர், நிதி மற்றும் வழிநடத்தல் உத்தியோகத்தர், பாலின உத்தியோகத்தர், சுற்றாடல் உத்தியோகத்தர், சேகரிப்பு உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர், சிரேஷ்ட படவரைஞர், பிரதம எழுதுநர் -

சிரேஷ்ட பொறியியல் உதவியாளர், பொறியியல் உதவியாளர், திட்ட செயலாளர், படவரைஞர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், உதவி கணகாய்வு உத்தியோகத்தர், வேலை மேற்பார்வையாளர், சாரதி, அலுவலக ஊழியர், பாதுகாப்பு உத்தியோகத்தர், காவலாளி, சுகாதார தொழிலாளி ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப இறுதித் திகதி இன்றாகும். இது தொடர்பான அறிவித்தல் நேற்றுமுன்தினம் மாலையே 'உதயன்' அலுவலகத்திற்குக் கிடைத்தது.

மேலதிக விவரங்களை www.neiap.org என்னும் இணையத்தளத்திலும் neiap@sltnet.lk என்னும் மின்னஞ்சல் முகவரியூடாகவும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் யாழ். மாவட்ட நியாப் அலுவலகம், யாழ். செயலகம், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், நீர்ப்பாசன அலுவலகம், கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் விளம்பரப் பலகைகளிலும் பார்வையிடலாம். (202)

# வலி. தென்மேற்கில் பெரும்போக விதைப்பு ஆரம்பம் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 20

இவ்வருட பெரும்போக விதைப்பு கடந்த 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் வலி. தென்.மேற்கு சண்டிலிப்பாய் கமநலசேவைகள் நிலையத்திற்குட்பட்ட கால்நடைகளை சம்பந்தப்பட்டோர் கட்டி வளர்க்க வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன தலைவர் சி. பொ. வ. ம. கா. முதலியார் காலபோக நெற்பயிர்ச் செய்கை கூட்டத்தில் வைத்துத் தெரிவித்தார்.

காலபோக கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கட்டுடையில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்ட சம்மேளனத் தலைவர் மேலும் கூறியதாவது:

குடாநாடு தழுவிய ரீதியில் இம்மாதம் 30ஆம் திகதியுடன் விதைப்பு முடிவடைகிறது.

கால்நடைகளால் கடந்த வருடம் விவசாயிகளுக்கு பெருநஷ்டம் ஏற்பட்டது.

அதேபோல் இவ்வருடமும் அந்த நிலை ஏற்படாமல் சகல கால்நடை சொந்தக்காரர்களும் விவசாயிகளுக்கு உதவ கால்நடைகளை கட்டுப்படுத்தி வளர்க்க வேண்டும் - என கேட்டுள்ளார்.

மானிப்பாய் மேற்கில் விதைப்பு முடிந்த பின்னர் வயல் காணிகளுக்கூடாக உழவு இயந்திரங்களைச் செலுத்திச் செல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றப்பணம் அறவிடப்படவுள்ளது.

ஆட்டுப்பட்டிகளை நெற்காணி களுக்கு ஊடாகக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பயிரழிவை ஏற்படுத்தும் வகையில் கட்டாக்காலியாகத் திரியும் ஆடு, மாடுகளைப் பிடிப்பதற்கு மூன்று பிடிகாரர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கூட்டத்தில் சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக அதிகாரி வை. பாலகிருஸ்ணன், விவசாய போதனாசிரியர் திருமதி பா. மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரையாற்றினர். (203-95-135)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 20

கலாபூஷணம் க.ப. சின்னராசாவின் மாணவனாகிய மகாதேவன் வினோகாந்தனின் மிருதங்க இசை அரங்கேற்றம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர், ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் 'இதயத்தால் சிந்திப்போம்' சமாதான விழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

* * *

யாழ்ப்பாணம், செப். 20

வட்டு. இந்து (நவோதயா) கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி அதிபர் ச. இராமலிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம், செப். 20

ஐயனார் இளைஞர் கழகமும் ஐயனார் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான கணித பாடத்திலான வழிகாட்டிப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுகிழமை காலை 8.30 மணியளவில் இராமநாதன் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனின் கல்விச் சேவையினைப் பாராட்டி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வியாளர்களால் வெளியிடப்படவுள்ள மணிவிழா மலரின் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் அறிமுகவுரையை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனும் நிகழ்த்துவர். (202)

# ஓவியப் போட்டியில் இணுவில் மாணவி முதலாமிடம்

யாழ்ப்பாணம், செப். 20

'அற்லஸ்' நிறுவனம் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய ஓவியப்போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை இணுவில் மத்திய கல்லூரி மாணவி பெற்றுள்ளார்.

ஜெயசிங்கம் மதுராங்கி என்ற மாணவியே முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை -

கல்வி அமைச்சின் போதைப் பொருள் தடுப்பு பிரிவு, பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போதைப் பொருள் தடுப்பு ஆக்கக் கண்காட்சியில் மேற்படி கல்லூரி மாணவர்கள் இருவர் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

மகேந்திரன் கலாறஞ்சினி, இராஜேந்திரன் கிருத்திவாசன் ஆகிய இருவருமே பரிசில்களைப் பெற்றுள்ளனர். (202)



இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையத்தின் முன்பள்ளி அண்மையில் சிறுவர்களுக்கான கண்காட்சி நிகழ்வொன்றை நடத்தியது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். குகநேசன், நிலையத்தின் போசகரும், யாழ். பல்கலைக்கழக வணிக [illegible] பீடாதிபதியுமான க. தேவராசா ஆகியோரும் முன்பள்ளி [illegible] ஆகியோரும் கண்காட்சியைப் பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வலிகாமம் வலய ஆசிரியர் கவனத்திற்கு

தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெறவுள்ள தடகளப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கென வலிகாமம் வலயத்தில் இருந்து செல்லும் பாடசாலைகளுக்குப் பொறுப்பானவர்களை இன்று முற்பகல் 10.30 மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் விவரங்களை இங்குவருகை தரும்போது எடுத்துவருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் எம்.எஸ்.எப். நிறுவனம் மகப்பேற்று நிபுணர் சேவை

யாழ்ப்பாணம், செப். 20

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எம்.எஸ்.எவ். நிறுவனம் மகப்பேற்று நிபுணர் ஒருவரின் சேவையை ஆரம்பித்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மாரும் பெண்நோயியல் சேவைகளைப்பெற விரும்பும் தாய்மாரும் வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு நிபுணரின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (202)

# B.Sc. (MATHS), B.A., B.Com., BBA

## காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

★ பல்கலைக் கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
★ A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதி யுடையவர்கள் ஆகும்.
★ B.A.இல் தமிழ், ஆங்கிலம், வரலாறு, அரசியல் விஞ்ஞானம், பொருளியல் ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவுசெய்யலாம்.
★ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
★ பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் எமது நிறுவன வளாகத்தில் நடைபெறும்.
★ மேற்குறிப்பிட்ட பட்டங்கள் யாவும் இலங்கைப் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
★ B.Sc. (MATHS) இற்குரிய விரிவுரைகள் ஆரம்பம்:- 29.09.2007, 8 மணி

யாழ்.இணைப்பாளர்,
**காமராசர் பல்கலைக்கழகம்.**
T.P.: 2228148, 2223208. (64924)

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


## விவசாயக் குழுக் கூட்டம்

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவு பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவசாயிகள் சம்மேளனங்களின் தலைவர்களை இதில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார்.

(203-135)


# 17ஆம் வருட இதய அஞ்சலி



## திருமதி கதிரவேலு இராஜேஸ்வரி

மண்ணில் 07✱02✱1947

விண்ணில் 29✱08✱1990

திதி: 20.09.2007 நவமி

ஆண்டுகள் பதினேழு ஆகிவிட்ட போதிலும்
உங்கள் அன்பு நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

103/4, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (64749) **குடும்பத்தினர்.**



## தவறிவிட்டது

கச்சாய் வீதி, கொடிகாமம் என்னும் விலாசமுடைய குணதாசன் பிளசிடா ஜோசப்பின் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (665560511V) கொடிகாமம்- யாழ்ப்பாணம் பயணத்தின்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.75, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நிஷானந்தா ஜூவலறியில் ஒப்படைத்துதவவும். (T.P.:7985) (64956)


## சமுர்த்தி முத்திரை பெறக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.20

ஆனைக்கோட்டை கிராம அலுவலர் பிரிவில் (ஜே/133) இதுவரை சமுர்த்தி உணவு முத்திரை பெறாதவர்களை உடன் பெற்றுக்கொள்ளுமாறு ஆனைக்கோட்டை பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சதீஷ் கேட்டுள்ளார்.

சமுர்த்தி உணவு முத்திரைகளை ஆனைக்கோட்டை சிவன் வீதிக்கு அருகில் உள்ள விநாயகர் ச.ச. நிலையத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது.

சமுர்த்தி பயனாளிகள் நிவாரண அட்டை, குடும்ப தலைவர் அடையாள அட்டை, முத்திரை அடிக்கட்டை, சமுர்த்தி குழுப் புத்தகம், சமுர்த்தி அங்கத்தவர் கணக்குப் புத்தகம் (தனிக் கணக்கு புத்தகம்) ஆகியவற்றுடன் வருகை தரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (203-95)


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை தர்மலிங்கம்



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை தர்மலிங்கம் 18.09.2007 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை தம்பதியரின் அன்பு மகளும் இ. தர்மலிங்கத்தின் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமு தம்பதியரின் அன்பு மருமகளும் இராமச்சந்திரன் (சவூதி அரேபியா), ஜெயச்சந்திரன் (ஜேர்மனி), இரவீந்திரன் (பிரான்ஸ்), தவேந்திரன் (கனடா), தர்மாம்பிகை (கணக்காளர் - வலயக்கல்வி அலுவகம் - தீவகம்) ஆகியோரின் அன்புத் தாயும் இ. விமலா (சுன்னாகம்), ஜெ. வாசுகி (ஜேர்மனி), இ.சுமதி (பிரான்ஸ்), த. மைத்திரேயி (கனடா), க. ஆனந்தகிருஷ்ணன் (போதனாசிரியர் - கணனிப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும் நிஷானா, கிருசாளினி, அர்ச்சுதன், பிரியங்கா, கீர்த்தனன், சந்தோஷ், சங்கீதன், நிருதா, அபிலாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சின்னத்தம்பி, ஆனந்தசுந்தரம் மற்றும் செல்லம்மா நடராஜா, விசுவலிங்கம், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூராவத்தை, சுன்னாகம்.*
*தொ.பே. 0776544630.* (64949)

தகவல்:
இ. தர்மலிங்கம் (கணவர்).



## மரண அறிவித்தல்

### துரையப்பா கிருஷ்ணானந்தன்



ஆனைக்கோட்டை, மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 116/5, கொட்டஹேன, புனித பெனடிற் மாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா கிருஷ்ணானந்தன் 17.09.2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பாலேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற துரையப்பா மற்றும் பாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் துஷ்யந்தன், அரவிந்தன், தர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகை, மீனா, சிறி, கமலா, நித்தி, பத்மா, கேதீஸ், காலஞ்சென்ற ரவி ஆகியோரின் சகோதரனும் கமலினி, பானுமதி ஆகியோரின் பாசமிகு மாமனும் அக்ஷயாவின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.09.2007) வியாழக்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இருந்து மாலை 5 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*116/5, சென்.பெனடிற் மாவத்தை,*
*கொழும்பு-13.*
T.P.: 011 4873776 (64951)

தகவல்:
குடும்பத்தினர்.



## ஆள் தேவை

உருக்கு அலுமாரி செய்வதற்கு அனுபவம் உள்ள ஆள் தேவை.
தொடர்பு: 65, டேவிற் றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2846, 077 9050186



# நெஞ்சை விட்டகலாத

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



### எமது குலவிளக்கு

# அமரர் பத்மநாதன் வீஷ்மானந்தர்

### (ஐங்கரன் இசைக்குழு உரிமையாளரும் இசையமைப்பாளரும்)

அன்னை மடியில் : 30.05.1977 — ஆண்டவன் அடியில் : 02.08.2006

திதி: அட்டமி

எமது இல்லத்தின் பாச தீபமே!
அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் இலக்கணமாய் வாழ்ந்தீர்!
இசை என்னும் இன்பவெள்ளத்தில் மலர்ந்தாய்!
இசைக்குழுவை உருவாக்கி ஐங்கரன் என்று பெயர் சூட்டினாய் வீஷ்மா!
உன்னை ஐங்கரன் என்று அல்லவா அழைப்பார்கள்
உன் இசையின் ஓசையை இனி எங்கே கேட்பேன்?
கண்கள் உறங்கினாலும் உன் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு உறங்காதையா!

கானல் நீராய் ஆனதே எம் வாழ்வு
பெற்றதாய் உற்ற மகனை இழந்து தவியாய்த் தவிக்கின்றார்
ஒரு முறை வந்து உன் திருமுகம் காட்டாயோ?
ஆண்டொன்று சென்றாலும் ஆறாதையா நம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் நினைவாக இன்று (20.09.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*74, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.* (64883) **குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மக்களின் நெடுநாள் கனவு நனவாகுமா?



குமுதினிப் படகு சேவையில் ஈடுபட்டிருந்த காலத்தில் இறங்குதுறையில் கட்டப்பட்ட நிலையில்

நெடுந்தீவுக்கான அரச படகுச்சேவை அடிக்கடி ஸ்தம்பிதம் அடைகிறது. கடந்த சில நாள்களாக குமுதினி படகு மீண்டும் சேவை நிறுத்தம் செய்து வருகின்றது. இது நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவையைப் படிப்படியாக பழுது என்று பெயரில் நிறுத்துவதன் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்ட சேவையை முற்றாக நிறுத்திவிட முனைகிறதா என இங்குள்ள மக்களைச் சந்தேகிக்க வைக்கிறது.

சேவையில் உள்ள அரச படகான குமுதினி நெடுந்தீவு மக்களுக்காக கடந்த 45 வருடங்களாக உழைத்து வருகிறது. அதற்குமுன் கொழும்புத் துறைமுகத்தில் பல வருடங்கள் அது பயன்படுத்தப்பட்டதாகும். 60 வருட காலம் அது தன் சேவையைப் புரிந்துள்ளது. இறுதிவரை ஏதோ தொழில் செய்து உழைத்துச் சீவிக்க வேண்டும் என நினைக்கும் முதியவர்கள் போன்று குமுதினியும் நோய் வாய்ப்பட்ட நிலையிலும் நெடுந்தீவுக்குத் தோள் கொடுத்து வருகின்றது.

*குமுதினி படகு நோய் வாய்ப்படுகிறதா நோய்க்குள்ளாக்கப்படுகிறதா?*

குமுதினி வயதின் காரணமாக நோய் வாய்ப்படுகிறதா அல்லது திணைக்கள உத்தியோகத்தர்கள் தமது வசதி கருதி அதனை நோய்க்கு உள்ளாக்கி வருகிறார்களா என்பது புரியாமல் இருப்பதாகவும் பொதுமக்கள் கூறுகிறார்கள். புதிய படகு கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், படகைத்தான் காணோம்.

ஏடுத்த எடுப்பில் நெடுந்தீவு படகுச் சேவைக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. இனிமேல் இலவச போக்குவரத்துச் சேவை எனவும் ஒருதினம் அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதியின் ஏற்பாட்டால் இந்த இலவசப் பயணம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து எத்தனை பிரயாணங்களை மேற்கொண்டு வந்துள்ளது என்பதை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவை அடிக்கடி நிறுத்தப்படுகிறது. அதன் காரணம் என்ன? அதற்கு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டாமா என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளோ செயலக அதிகாரிகளோ கிஞ்சித்தும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

**நெடுந்தீவு மக்களின் நெடுங்காலமான எதிர்பார்ப்பு**

ஓர் உறுதியான படகின்றி மக்கள் மழை, வெயில் கொந்தளிக்கும் கடல், இவற்றின் தாக்கங்களுக்கு இலக்காகி மிகுந்த சிரமங்களின் மத்தியில் சில சமயம் திடீரெனப் பழுதடையும் காரணத்தால் நீண்ட நேரம் இரவு வேளைகளில் கடலில் தத்தளித்து தெய்வாதீனமாக கரைசேர்ந்த சம்பவங்கள் அரச படகுச் சேவை வரலாற்றில் நிறையவே உண்டு.

## கடல் பயணத்துக்கு பாதுகாப்பான படகுச் சேவை கிடைக்கவேண்டும்

படகுச் சேவைக் கஷ்டம் குறித்து நெடுந்தீவு மக்கள் நீண்டகாலமாக உயர் அதிகாரிகளுடன் சந்திப்புகள் தொடர்புகளை வைத்திருந்த போதும் நிலைமை திருந்தியதாக இல்லை. முன்னர் ஒரு போது... ஒரு தடவை ஓர் உயர் அதிகாரியைச சந்தித்து இந்தச் சேவையின் பாதிப்பினால் மக்கள் படும் அவஸ்தை கள் குறித்து கேட்டபோது அந்த அதிகாரி 'மக்கள் கடலில் கஷ்டப் பட்டு மடிந்தால் எனக்கென்ன?' என்று பதி லளித்த தாகவும் மக்கள் மத்தியில் ஒரு கதை அடிபடுகின்றது.

**மக்கள் பிரச்சினை**

தற்சமயம் குமுதினி பழுதடைந்தால் என்ன, பல நோ.கூ. சங்கப்படகு இருக்கிறது தானே என சிலர் ஆறுதல் கூறுவதாகவும் தெரிய வருகின்றது.

பல்வேறு துன்பங்களில் வாழும் இன்றைய நெடுந்தீவு மக்கள் தமது தேவைகளுக்காக யாழ்.நகருக்கு வர வேண்டியுள்ளமை தவிர்க்க முடியாத தொன்றாகும். நெடுந்தீவுக் கடலைச் சமாளித்துச் செல்லக்கூடியஉறுதியும் பாதுகாப்பும் நிறைந்த படகு நெடுந்தீவுக்கு அவசியம். இந்தச் சேவையைச் சீராக நடைமுறைப்படுத்த அதிகாரிகளுக்கும் படகில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் மக்களின் கஸ்டங்களைப் போக்குவரத்தில் அதிக அக்கறையும் காட்டவேண்டும்.

எதிர்காலத்திலாவது மக்கள் நிம்மதி யான கடல் பயணங்களை மேற்கொள்ள அண்மையில் சமூக சேவைகள் அமைச்சர் தெரிவித்தது போன்று புதிய படகு நெடுந்தீவுக்குக் கிடைக்க வேண்டும் என்பதுடன் அதிகாரிகளும் மனிதாபிமானப் பணிகளை நல்ல மனதுடன் முன்னெடுக்கவேண்டும் எனவும் நெடுந்தீவு மக்கள் விரும்புகின்றனர்.

நம்பி

# செய்தியாளர் விசாரிக்கப்பட்டமைக்கு ஐந்து ஊடக அமைப்புகள் கண்டனம்

### செய்திக்கான மூலங்களைத் தெரிவிக்கும் பொறுப்பு ஊடகவியலாளருக்கு இல்லை

கடந்த செப்டெம்பர் 09ஆம் திகதி வெளிவந்த 'த நேஷன்' பத்திரிகை செய்தியில் 'எஸ்டன் மார்டின்' ரக சொகுசு வாகன இறக்குமதி தொடர்பாக விவரங்கள் வெளியிடப்பட்டன.

இவ்விடயம் குறித்து இச்செய்தியை எழுதிய ஊடகவியலாளர் புலனாய்வுத்துறைப் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதனை ஐந்து ஊடக அமைப்புகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், முஸ்லிம் மீடியா போரம், தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் ஆகிய அமைப்புகளே இந்தக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

'த நேஷன்' பத்திரிகை அலுவலகத்துக்கு வந்த புலனாய்வுப் பொலிஸார் சம்பந்தப்பட்ட செய்தியை எழுதிய இந்திக சகல சூரிய என்ற ஊடகவியலாளரை சுமார் இரண்டு மணித்தியாலங்கள் துருவித் துருவி விசாரணை செய்துள்ளனர். இந்த வாகனம் பிரபல அரசியல்வாதியொருவரின் புதல்வனுக்குச் சொந்தமானது.

செய்தியுடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் புகைப்படங்கள் என்பன எவ்வாறு கிடைத்தன என்பது குறித்து இந்திக சகல சூரியவிடம் புலனாய்வுப் பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தியுள்ளனர்.

எந்தவொரு ஊடகத்திலும் வெளியிடும் செய்திக்கான இரகசிய மூலங்கள் எங்கிருந்து கிடைத்ததென்பதை எவருக்கும் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு ஊடகவியலாளருக்கு இல்லை. அதேபோல், அச்செய்தி தொடர்பான இரகசிய மூலங்களை பாதுகாக்கும் பொறுப்பு ஊடகவியலாளர்களுக்கு இருக்கின்றது.

இந்த அழுத்தம் காரணமாகப் புலனாய்வுச் செய்திச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

மக்களின் தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமையில் தலையிட வேண்டாமென சம்பந்தப்பட்ட தரப்பினிடம் கேட்டுக்கொள்கின்றோம் - எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## சர்வதேச சமாதான தினம்

இலங்கை தேசிய சமாதானப் பேரவை சர்வதேச சமாதான தினத்தைக் கொண்டாடும் முகமாக 'சமாதானத்திற்காக நாம்' எனும் தொனிப்பொருளில் 18 மாவட்டங்களில் பல்வேறுபட்ட நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்நிலையில் சர்வதேச சமாதான தினமான நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் ஊர்வல நிகழ்வொன்று இடம்பெறவிருக்கின்றது. இந்த ஊர்வலம் விகாரமகா தேவி பூங்காவில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகி பொரளை, மருதானை, கோட்டை, கொம்பனித் தெரு ஊடாகச் சென்று மீண்டும் விகாரமகா தேவி பூங்காவை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(சி)

# வீதித்தடை சாவடிகளில் வாகன அனுமதிப் பத்திரத்தை சோதனையிடுவதற்கு அனுமதியளிக்க முடியாது

### பிரதம நீதியரசர் கூறுகிறார்

கொழும்பு, செப். 20

''வீதித்தடை சோதனைச் சாவடிகளில் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற வற்றைப் பரிசீலிப்பதற்கு பொலிஸாருக்கோ அல்லது படையினருக்கோ ஒரு போதும் அனுமதி அளிக்கமுடியாது''

- இவ்வாறு பிரதம நீதியரசர் சரத்.என். சில்வா தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த டபிள்யூ.ஐ.எஸ்.றொற்றிக்கோ என்பவரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியபோதே பிரதம நீதியரசர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவது தொடர்பாக அதனைத் தடுப்பதற்கு கடமையில் ஈடுபடும் பொலிஸார் தமது கடமைகளில் எல்லை மீறிச் செல்வது லஞ்சம் பெறுவதற்கு உந்துதலாக அமையும் - என்றார்.

(சி)

# மேர்வின் சில்வாவின் மகனது குற்றத்தை நிரூபிக்கப் போதிய சாட்சியம் உள்ளது

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் சொல்கிறார்

கொழும்பு கோளிக்கை விடுதி ஒன்றில் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவினால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் கணக்காளர் சமிந்சேன சிங்கவின் வாக்கு மூலமும் மருத்துவ அறிக்கையும் துப்பாக்கியால் தாக்கப்பட்டமையை உறுதிப்படுத்தப்போதுமானவை.

- இவ்வாறு பொலிஸ் தலைமையகத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெயக்குமார் தங்கவேலு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவின் அடிப்படை உரிமை மீறப்பட்டன என்று கூறி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டிருக்கிறது.

அந்த முறைப்பாடு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே பிரதிப் பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார். மாலக சில்வாவின் முன்னைய அறிக்கையும் ஆராயப்படவுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (சி)

## வடமராட்சியில் மரக்கறிகள் திருட்டு

வடமராட்சியில் மழைநேரங்களில் தோட்டங்களில் மரக்கறிகள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

மரவள்ளிக் கிழங்குகளே அதிகளவில் திருடப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையின்போது வடமராட்சியின் பல பாகங்களிலும் தோட்டங்களில் உள்ள மரக்கறிகள் திருடப்பட்டுள்ளன. (202-155)

# இலங்கையின் இளைஞர் - யுவதிகளில் மூன்று லட்சம் பேருக்கு வேலையில்லை

கொழும்பு, செப். 20

இலங்கையில் 15 - 24 வயதுப் பிரி வில் 32 லட்சம் இளைஞர் - யுவதிகள் உள்ளனர். இவர்களுள் சுமார் 3 லட்சம் பேர் தொழில் வாய்ப்பற்றுள்ளனர்.

- இவ்வாறு சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் இலங்கை நாட்டுக்கான பணிப்பாளர் ரீனேஸ்ரெமோஸ் தகவல் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் இளைஞர் வேலைவாய்ப்பு வலையமைப்பு உருவாக்கப்பட்டதனையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் மொத்த சனத் தொகையில் 18.5 சதவீதம் இளைஞர்- யுவதிகளாவர். 84 சதவீதம் இளைஞர்- யுவதிகள் கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் 5 லட்சம் பேரில் 44 சதவீதம் இளைஞர்கள் வேலைவாய்ப்பற்றுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் மதிப்பீட்டின் படி உலகில் இன்று 8 கோடி 82 லட்சம் இளைஞர் - யுவதிகள் வேலைவாய்ப்பற்றுள்ளனர். உலகில் சகல தரத்திலும் 18 கோடி 59 லட்சம் பேர் வேலைவாய்ப்பற்றுள்ளனர். அநேக தொழிலாளிகள் குறைந்த கூலிக்கு வேலை செய்பவர்களாக உள்ளனர்.

சர்வதேச ரீதியில் இளைஞர்களுக்கு ஆக்கத்திறனுடன் கூடிய தொழிற்பயிற்சி வழங்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது.


எதிர்கால பொருளாதாரத்தின் திறவுகோல் இத்தொழிலாளர் படையிடமே உண்டு.

உலகநாடுகளில் எமது தொழில்நுட்ப உதவிகள் இளைஞர் வேலைவாய்ப்பை அதிகரிக்க பயன்படுகின்றன. வறுமைச் சக்கரம், சமூகப் பெயர்வு என்பவற்றிலிருந்து தப்ப இவ்வுதவி உதவுகின்றது. இலங்கையில் இது ஆரம்பிக்கப்படுவதனையிட்டு சந்தோசமடைகிறேன்.

இத்திட்டம் இளைஞரிடையே சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு, நற்பெயர் போன்றவற்றை அனுபவித்தலுடன் வாழ்க்கைக்குத் தேவையான ஆதாரத்தையும் பெற உதவும் என்பது எமது எதிர்பார்ப்பு - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின்
தென்மராட்சி கிளை
அங்கத்தவரும்
யூனியன் பேக்கரி
உரிமையாளருமாகிய

**செல்லையா**
**ஜெகபாலசிங்கம்**

அவர்களின் மரணத்தை
யிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினரும்
அங்கத்தவர்களும்
பணியாளர்களும்
யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி.53741)

# விழிநீர் சொரிய
## 31 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

தாயின் மடியில் பூவாக
16 ★ 06 ★ 1962



சந்நிதியான் திருவடியில் மலராக
21 ★ 08 ★ 2007

**திருமதி அன்னலக்சுமி (பூ) பத்மநாதன்**

வழி தெரியா எம் வாழ்வுக்கு முகவரியிட்ட - நீர்
உறவென்ற ஒன்றை உருவாக்கிவிட்டு
பாதி வழி தனிலே பரிதவிக்கவிட்டு சென்றதேனோ?
அம்மா, உம் "பூ" முகம் காண்பதெப்போ?

பிள்ளையார் கோவிலடி,
வட்டு-கிழக்கு, சித்தன்கேணி.
உயிருள்ள வரை உம் நினைவால் பரிதவிக்கும்:
பாசமிகு கணவரும், பிள்ளைகளும். (சி/53740)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

917 நீலம்

வெற்றி இலக்கங்கள்

இடபம் **31 44 49 50**

**18-09-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4300483 - 4315998

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 334,010 | 10/- | 3,340,100/- |
| 2 இலக்கங்கள் | 30,599 | 20/- | 611,980/- |
| 1 இல. + லக்கினம் | 30,220 | 30/- | 906,600/- |
| 2 இல. + லக்கினம் | 2,792 | 100/- | 279,200/- |
| 3 இலக்கங்கள் | 819 | 500/- | 409,500/- |
| 3 இல. + லக்கினம் | 74 | 5,000/- | 370,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,317,380/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 398,523 | | 7,340,880/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,745,300/-

தொடர் இல. 5191539 க்கு மேற்பட்ட சில்லறை நிற டிக்கட்டுக்கள் 2007 செப்டம்பர் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 4308815-6-55 |
| களுத்துறை | 4312186-9-30 |
| கம்பஹா | 4315647-7-36 |
| குருநாகல் | 4306644-0-37 |
| ஹம்பாந்தோட்டை | 4304679-4-84 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

# தவறிவிட்டது

சுப்பிரமணியம் சொரூபன் என்பவரினால் 13.09.2007 திருகோணமலையிலிருந்து கப்பலில் வரும்போது பயணி ஒருவரிடம் சு.ப. எனப் பெயரிடப்பட்ட பொதியொன்று (மஞ்சள் சொப்பிங் பைகள் கொண்டது) கொடுக்கப்பட்டது. அப்பொதியை யாழ்ப்பாணம் வந்த போது பெற்றுக்கொள்ளவில்லை. அவற்றை வைத்திருப்பவர் திருநெல்வேலி உதயன் பத்திரிகை கடைக்கு அருகிலுள்ள சொரூபன் வெற்றிலைக் கடையில் அல்லது தொ.பே. 0779060299 உடன் தொடர்புகொள்ளவும்.

# தேவை

நாவலர் வீதி, நாவாந்துறையிலுள்ள அரைக்கும் ஆலைக்கு லிகிதர் தேவை. (பெண் பிள்ளை விரும்பக்கூடியது)

தொடர்பு: 531, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
0776941677

# கோழிக்குஞ்சு விநியோகம்

BAHRAHA பிறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
* றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி
* மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி

T.P.: 222 3529, 222 2867 (64910)

# பூங்கன்றுகள் விற்பனைக்கு

செவ்வரத்தை, மினிஎக்ஸ்சோறா (பிங், வெள்ளை, சிவப்பு), தோரந்தா, போகன்விலா, அலரியா, அவுஸ்திரேலியன் புல், பம்பு நாவல், றோசினா, மல்லிகை ஆகிய பூக்கன்றுகள் விற்பனைக்குண்டு.
GREEN PARK 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி



தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
ஜெ.சத்தியேந்திரன்
அவர்களின்
அன்புத் தந்தை

**தம்பு ஜெகதீசசிங்கம்**

அவர்கள் 18.09.2007 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளர்,
தென்னை அபிவிருத்திச் சபை
உத்தியோகத்தர்கள்,
சக ஊழியர்கள்.
(64960)
யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**இரத்தினம்**
**ஜெயதேவன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.06.1958 | 19.08.2007 |

குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்னையாய் தந்தையாய் வாழ்ந்து எம்மை
வளர்த்து வாழ வைத்த எமது அன்பு
அப்பாவின்
பாதங்களுக்கு இந் நினைவு நாளில்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

19.09.2007 அன்று ஜேர்மனியில் காலமான எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (20.09.2007) வியாழக்கிழமை ஏழாலையில் உள்ள இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இறுதிக்கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் எங்கள் நன்[illegible]

ஏழாலை. குடும்பத்தினர். (சி 53743)

# Rainbow Travels & Tours


**தீபாவளியை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகளில் பொதிகள் சேவை**

கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு தேவையான உணவு, உடைகள், பிளாஸ்டிக் பொருள்கள், மின்சார உபகரணங்கள், இரும்பு, அலங்காரப் பொருள்கள் என்பனவும் மற்றும் சகல விதமான வியாபாரப் பொருள்களும் எல்லா விதமான அனுமதியும் பெற்று கொழும்பிலிருந்து பெற்றுத் தரப்படும்.
சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் விமானம் மூலம் எம்மால் அனுப்பி வைக்கப்படும்.

**Rainbow Travels & Tours**
32 1/2 Kasthuriyar Road,
Jaffna. T.P.: 021 222 3237. (64954)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 28 . 08 . 1917



உதிர்வு 21 . 08 . 2007

**அமரர் இரத்தினம் சுப்பிரமணியம்**

எமது அன்புத் தாயின் இறுதிக் கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் நினைவஞ்சலித் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் தகனக்கிரியைகளுக்கு உதவி ஒத்தாசை பல புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் 18.09.2007 செவ்வாய்க்கிழமை வில்லூன்றி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்ற கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (20.09.2007) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

73, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (64959) குடும்பத்தினர்.

# நெஞ்சை நெருடும் ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 . 02 . 1964



ஆண்டவன் அடியில் 01 . 10 . 2006

**அமரர் தம்பையா மணிவண்ணன்**
(தியாகராசா)

நிலையில்லா இவ்வுலகில் நிலைத்துவிட்ட உன் அன்பால்
யாவர்க்கும் இனியவராய் வாழ்ந்து
எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
உன்நினைவை மறக்க முடியாது
நாம் நீந்துகின்றோம் கண்ணீர் கடலில்!
உன் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

சுப்பர்வளவு,
அல்வாய் கிழக்கு,
அல்வாய். (64955)
மனைவி, மக்கள்,
மாமன் தங்கத்துரை மற்றும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

**க.அமிர்தலிங்கம் (ஈழமோகன்) மண்டைதீவு**

(முன்னாள் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா அமிர்தலிங்கம் அவர்கள் 18.09.2007 இல் காலமானார்.

அன்னார் கந்தையா - மாரிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் இராசபூபதி, மாணிக்கலிங்கம், காலஞ்சென்ற கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2007) வியாழக்கிழமை கந்தரோடையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3 மணிக்கு சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தையா மாரிமுத்து வீதி,
[illegible], கந்தரோடை.
தகவல்:
மா.திருலிங்கம் (பெறாமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சீலம் போதித்த பௌத்தத்தை சீர்கெட்டுப் போகவிடும் அவலம்

• இன வன்முறை பெரும் புயலாக வீசி, பூகம்பமாய் அதிரும் தீவு இது.

இங்கு கௌரவமான வாழ்வும், நியாயமான அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் வேண்டி சிறுபான்மையினரான தமிழர்கள் நடத்தும் விடுதலைப் போராட்டம் பெரும்பான்மையினச் சிங்கள ஆட்சியாளர்களினால் மனித குலத்துக்கே விரோதமான பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்படுகின்றது.

அதேசமயம், சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராக பௌத்த - சிங்கள மோலாதிக்கத் திமிரில் மூழ்கியுள்ள பேரினவாதம் தமிழரின் வாழ்வியலைச் சிதைத்து, அவர்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் கொடூரமாகக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் ஒடுக்குமுறை, சிறுபான்மைத் தமிழர்களால் பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் தமிழரின் ஏக, அதிகார பூர்வ பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படுபவை என்று கூறப்படும் புலிப் பயங்கரவாதம் குறித்து அதிகம் விமர்சித்துவந்த சர்வதேச உலகம், இப்போது உண்மையை உணர்ந்து, எல்லாவற்றையும் விஞ்சும் விதத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாதம் குறித்தும் அதிகம் பேசத் தலைப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்களுள் ஒருவரான திக் விஜய் சிங், கொழும்புக்குவந்து 'பயங்கரவாதம்' குறித்துப் பிரஸ்தாபித்திருக்கிறார்.

அவர் எந்த நிகழ்வில், எந்தப் பின்னணியில் இந்தப் பயங்கரவாதம் பற்றிய தமது சிந்தனையை வெளிப்படுத்தினார் என்பது விசேடமாகக் கவனிக்கத்தக்கது.

பௌத்த மத மறுமலர்ச்சியின் பிதாமகர் என்று கருதப்படும் அநகாரிக தர்மபாலவின் 143 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி கொழும்பு மகாபோதி சங்கம் நடத்திய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

*''மனித சமூகத்தின் சமாதானத்திற்கும் நல்லுறவுக்கும் ஊறு விளைவிக்கும் எந்த மதமும் பயங்கரவாதத்தையே தோற்றுவிக்கின்றது. அன்பும் புரிந்துணர்வுமே இன்று உலகிற்கு அவசியமாகத் தேவைப்படுகின்றன.''* - என்று உண்மையை வெளிவெளியாக எடுத்துக்கூறியிருக்கின்றார் திக் விஜய் சிங்.

சரியான இடத்தில், சரியான சமயத்தில், சரியான முறையில், சரியான விடயத்தை அவர் எடுத்துரைத்திருக்கின்றார் என்றே கருத வேண்டியிருக்கின்றது.

பௌத்த மத மறுமலர்ச்சியின் மூலவேராகக் கருதப்படும் அநகாரிக தர்மபால யார்? - அதை அறிவதற்கு அவர் வாழ்ந்த கால கட்டத்தை நாம் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்.

பிரிட்டிஷ் காலனித்துவத்தின் கீழ் இலங்கை இருந்தபோது அதற்கு எதிராகப் போராடியவர் அவர் என்றாலும் அவரது அந்தப் போராட்டம் இரு முனைப்பட்டதாக இருந்தது. ஒரு பக்கம் வெள்ளைக்கார ஆதிக்கம். மறுபுறம் அந்த ஆதிக்கத்தின் கீழ் தலை நிமிர்ந்து நின்ற தமிழினம். இந்த இரண்டுக்கும் எதிரான இரட்டைக்குழல் துப்பாக்கியாகவே அவரது சிங்களப் பேரெழுச்சி என்ற மறுமலர்ச்சித் திட்டம் அமைந்தது.

பௌத்த மத மறுமலர்ச்சி என்ற சுலோகத்தின் கீழ் அவர் முன்னெடுத்த தேசிய மேலாண்மைக் கருத்தியல் தமிழர் மீதான பெரும் காழ்ப்புணர்வாகவும் பீறிட்டமையை நாம் ஒதுக்கிவிட முடியாது. அந்தநேரத்தில் அவர் விதைத்த வித்துத்தான் பெரு விருட்சமாகி இன்று இலங்கைத் தீவைப் பேரினவாத மேலாண்மை என்ற கொடூர ஜந்தாகப் பற்றிப் பீடித்துச் சீரழித்து நிற்கின்றது.

'ஒரு பண்டைய நாகரிகத்தின் வரலாறு' என்ற பெயரில் அநகாரிக தர்மபால எழுதிய நூல் ஒன்றின் சில பந்திகள், அந்தப் பெரும் தேசிய வீரரின் ஆழ்மனதில் புரையோடிக்கிடந்த கேவலமான பேரினவாதச் சிந்தனையைப் புட்டுக்காட்டப் போதுமானவையாகும்.

*''மனித இயல் பகுப்பியல் ஆய்வின்படி சிங்களவர் ஒரு தனித்துவம் வாய்ந்த இனத்தவர். வேறு இனக் கலப்பில்லாதவர். அடிமைகளின் இரத்தம் அவர்களிடம் கலக்கப்படவில்லை என்பதையிட்டு அவர்கள் பெருமைகொள்ளலாம். மூன்று நூற்றாண்டுகளாக எமது தாயக மண்ணை சீரழித்துத் தொன்மை வாய்ந்த எமது ஆலயங்களை இடித்தழித்து, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எமது இனத்தைப் பூண்டோடு அழிக்க முற்படும் காட்டுமிராண்டித் தமிழராலோ, ஐரோப்பிய காடையராலோ என்றும் வெற்றிகொள்ள முடியாதவர்கள் என்பதையிட்டு சிங்கள மக்கள் பெருமை கொள்ளலாம். நாகரிகமற்ற காடையர்களால் சீரழிக்கப்பட முன்னர் ஒளிமயமான இந்த அழகிய தீவு ஆரிய சிங்கள மக்களால் ஒரு சுவர்க்க பூமியாகவே உருவாக்கப்பட்டிருந்தது.''* - என்று கூறியிருந்தார் அநகாரிக தர்மபால.

இலங்கைத் தீவு சிங்களவருக்கு மட்டுமே உரியது, ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்கள் போன்று நோக்கவேண்டிய அந்நியரே ஈழத் தமிழர்கள் என்ற விதையை விதைத்து, இத்தகைய பேரினவாதச் செருக்குப் பிடித்த தலைவர்களினால் வளர்த்தெடுக்கப்பட்ட பௌத்த - சிங்கள மேலாண்மை சிந்தனையே இலங்கைத் தீவின் தேசியப் பற்றுணர்வாக உருவெடுத்து வடிவெடுத்தது.

பௌத்த மத மறுமலர்ச்சியின் உட்கிடையாகத் தோற்றம் கொண்ட சிங்களப் பேரினவாதம், தேசியஅபிவிருத்திக்கு, சிறுபான்மைத் தமிழரின் வளர்ச்சியும், விருத்தியும் பெரும் அச்சுறுத்தல் எனக் கருதியது.

இந்நிலையில்தான் இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் காலனித்துவக் கையிலிருந்து நாட்டின் பெரும்பான்மையினர் என்ற வகையில் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் கைகளுக்கு மாறின.

அதுவரை ஆட்சி அதிகாரம் இல்லாத பௌத்த தேசியவாதத் திடம் கொதித்து, அடக்கப்பட்டிருந்த தமிழர்விரோதக் காழ்ப்புணர்வு, ஆட்சி அதிகாரம் அந்தத் தேசியத் தலைமைகளிடம் கைமாறியதை அடுத்து, சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிரான திண்ணிய சமூக, அரசியல், பொருளாதார வாழ்வியல் ஒடுக்குமுறையாகவும், தமிழரின் அமைதியான - கௌரவமான - வாழ்வையும் இருப்பியலையும் கேள்விக்கு உள்ளாக்கும் முறையற்ற அடக்கு முறையாகவும் பீறிட்டு உருவெடுத்து ஈற்றில் அரச பயங்கரவாதமாக விஸ்வரூபம் பெற்றது.

இந்த மதத்தைப் பார்த்து - அதனை நிலைநிறுத்திய ஒரு பௌத்த பெருந்தகையை நினைவுகூரும் ஒரு நிகழ்வில் வைத்து - ''மனித சமூகத்தின் சமாதானத்திற்கும் நல்லுறவுக்கும் ஊறு விளைவிக்கும் எந்த மதமும் பயங்கரவாதத்தையே தோற்றுவிக்கும்'' - எனச் சரியாகத் தான் 'சூடு' போட்டிருக்கின்றார் இந்திய காங்கிரஸின் பொதுச் செயலாளர்களுள் ஒருவரான திக் விஜய் சிங். அவரை அழைத்து பேருரை ஆற்றவைத்த மதத் தலைவர்களுக்கு, காருண்ய சீலம் போதித்த கௌதம புத்தரின் உயர்ந்த வாழ்வியல் நெறி, பயங்கரவாதம் பிறப்பெடுப்பதற்கான ஊற்றுக் கண்ணாக மாற்றப்பட்டிருக்கும் கேவலம் புரிந்தால் சரி தான்.

# மனித உரிமை மீறல் விசாரணைகள் தொடர்பாக அரசு தன் உறுதி மொழிகளை மீறி அவற்றை மறைக்க முயற்சி

## நீதியரசர் பகவதி தலைமையிலான பிரமுகர்கள் குழு அறிக்கை

கொழும்பு, செப். 20

பல்வேறு முக்கிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக இடம் பெறும் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு பல்வேறு நாடுகளின் பதினொரு பிரமுகர்களை உள்ளடக்கி இலங்கை அரசு நியமித்த உயர் சுயாதீனக் குழு, மேற்படி மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் எனத் தான் வழங்கிய உறுதி மொழிகளை நிறைவு செய்ய இலங்கை அரசு தவறிவிட்டது என்றும், அவற்றை மூடி மறைக்கவே அரசு முயல்கின்றது என்றும் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் எனத் தான் அளித்த வாக்குறுதியை கௌரவிக்கவும் காப்பாற்றவும் இலங்கை அரசு தவறிவிட்டது. அத்துடன் உண்மையாகவே அவற்றை மூடிமறைக்கவே அரசு முயல்கின்றது என்று அது கூறியுள்ளது.

11 பிரபல்யமான பிரமுகர்களைக் கொண்ட இந்த சர்வதேச சுயாதீனக் குழு, நேற்று புதன்கிழமை இக்குற்றச் சாட்டுகளைக் கொண்ட ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

### முன்னோக்கி நகர்வதில் முழுத்தோல்வி

அதில் அது பின்வருமாறு விவரித்துத்துள்ளது:-

மோசமான கொலைகள் உட்பட 16 அசம்பாவிதங்கள் தொடர்பான அரசு மட்ட விசாரணைகள் அவை ஆரம்பிக்கப்பட்ட 2006 நவம்பர் முதல் இது வரை, முன்னோக்கி நகர்வதில் முழுத் தோல்வி கண்டுள்ளன.

இவை தொடர்பான புலனாய்வுகளும் விசாரணை முன்னெடுப்புகளும் இவ் விடயத்தில் இதுவரை எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச முன்னுதாரணங்களினதும் தரங்களினதும் மட்டங்களை எட்டத் தவறியேவிட்டன என்பதே, இந்த சுயாதீனக் குழுவின் தீர்க்கமான முடிவாகும்.

இவ்விசாரணை ஆணைக்குழுவுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதில் அரச சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் முக்கிய முன்னணி பங்கு வகிப்பதற்கு இக்குழு மீண்டும் தனது ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்கின்றது.

விசாரணை ஆணைக்குழு மீது மக்கள் கொள்ளும் நம்பிக்கை, அதன் நம்பகத்தன்மையைப் பொறுத்தே அமைகிறது.

### சுயாதீனப்போக்கு இல்லை

அதற்கு முக்கிய காரணிகளாக இருப்பவை - அவ்விசாரணை விவகாரங்களில் தேசிய, சர்வதேச தரங்களுக்கு அமைவான சுயாதீனப் போக்கும் பாரபட்சமின்மையும் கைக்கொள்ளப்படுதல் ஆகும்.

இந்த விசாரணைக் குழுவைப் பொறுத்தமட்டில் இக் காரணிகள் போதிய தெளிவு அற்றவையாகவும் உடன்பாட்டுக்கு ஒவ்வாதவையாகவும் உள்ளன. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது

சர்வதேச சுயாதீனக் கண்காணிப்புக்குழுவின் மேற்படி அறிக்கை, அதன் தலைவரும் ஓய்வுபெற்ற இந்திய பிரதம நீதியரசருமான பி.என்.பகவதியால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மூதூரில் 17 தொண்டுப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை உட்பட 16 மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்னெடுப்புகளைக் கண்காணிப்பதற்காக ஜனாதிபதியால் இந்த சர்வதேச சுயாதீனக் கண்காணிப்புக் குழு நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சுயாதீனக் கண்காணிப்புக் குழுவில் ஆஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, ஜப்பான், நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்களும், ஐரோப்பிய ஒன்றியம், மனித உரிமைகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றைச் சேர்ந்த பிரமுகர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

இந்தப் புலனாய்வு விசாரணைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதில் இலங்கை அரசு தவறுமானால் அது மோசமான விமர்சனங்களுக்கு உள்ளாகும் என பிரான்ஸின் புதிய வெளிவிவகார அமைச்சரும் மேற்படி பிரமுகர் குழுவின் உறுப்பினருமான பேர்னாட் குக்னர் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (சி)

# உயிர் அச்சுறுத்தலால் 3 பிள்ளைகளின் தந்தையும் சரண்

யாழ்ப்பாணம்,செப்.20

உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து நேற்றும் இருவர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

இயற்றாலை, வரணியைச் சேர்ந்த 34 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையும், கொடிகாமத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவருமே இவ்வாறு சரணடைந்துள்ளவர்களாவர்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (அ-50-68)

# குடும்பஸ்தரின் மரணம் தொடர்பாக மனைவியும் மகனும் கைதாகினர்

யாழ்ப்பாணம், செப்.19

சாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் கடந்த வாரம் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி மரணமான குடும்பஸ்தரின் மரணம் தொடர்பாக இறந்தவரின் மனைவியையும் மகனையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச் சம்பவத்தில் மரணமடைந்த சுந்தரம் செல்வராசா(வயது 45) என்பவரின் மனைவியான செல்வராசா மல்லிகாதேவியும், மகனான செல்வராசா ரவீந்திரன் ஆகியோரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தந்தையை வெட்டிக்காயப்படுத்தி மரணம் ஏற்படுத்தியதற்காக மகன் மீதும், சம்பவத்தை நேரில் கண்டு உண்மையை மறைத்தமைக்காக தாய் மீதும் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் இம் மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-207)

# பஸில் எம்.பியாகப் பதவியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி உறுப்பினர்களும் எழுந்து சென்று அவருக்கு கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர்.

ஜனாதிபதியின் மற்றும் ஓர் உறவினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிருபமா ராஜபக்ஷ தனது ஆசனத்தில் இருந்து எழுந்து ஓடிச் சென்று பஸிலைக் கட்டியணைத்து முத்தமிட்டு வாழ்த்துத் தெரிவித்துக்கொண்டார். சபைக்கு சற்றுத் தாமதமாகவே வந்த அமைச்சர் அதாவுல்லாவும் பஸில் ராஜபக்ஷவை கட்டியணைத்து வாழ்த்துத் தெரிவித்துக்கொண்டார்.

• சபாநாயகர் தனது ஆசனத்தில் அமர்ந்தவுடன் தேசியப்பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்து கொள்ள அழைத்தார்.

வழமையாக ஆளும்கட்சி அல்லது எதிர்க்கட்சி உறுப்பினராகப் புதிதாக எவராவது நியமிக்கப்பட்டால் அவர் சார்ந்த கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் புதிய உறுப்பினரை சபாநாயகரின் முன் அழைத்து வருவார்கள்.

ஆனால் பஸில் ராஜபக்ஷவை எந்த ஒரு சிரேஷ்ட உறுப்பினர்களும் அழைத்து வரவில்லை. அமைச்சர்களும் அவரவர் ஆசனத்திலேயே இருந்தனர். படைக்கல சேவிதர் மட்டுமே பஸிலுடன் உடன் வந்தார். பஸில் சபாநாயகரின் முன் சத்தியப்பிரமாணத்தை சிங்களத்தில் வாசிக்க ஆரம்பித்தார்.

### சுலோக அட்டைகளைப் பிடித்தனர்

அப்போது எதிர்க்கட்சி வரிசையில் ஐ.தே.க. உறுப்பினர்கள் அனைவரும் தாம் தயாராக வைத்திருந்த சுலோக அட்டைகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றனர். அந்த சுலோக அட்டைகளில் '10%கொமிஷன்!' எனக் கொட்டை எழுத்துகளில் எழுதப்பட்டிருந்தது.

இதனைக் கண்ட ஆளும்கட்சி உறுப்பினர்கள் ஆத்திரத்துடன் வசைபாட ஆரம்பித்து விட்டனர். கடுமையான சொற்பிரயோகங்களையும் தாராளமாக அவர்கள் வாரி வீசினர்.

இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் ஆளும்கட்சி உறுப்பினராக பஸில் ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

பதவிப்பிரமாணம் செய்துகொண்டபின் பஸில் ராஜபக்ஷ பிரதமர் உட்பட சிரேஷ்ட அமைச்சர்களிடம் சென்று தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். அவருக்கு ஆளும் தரப்பில் பின் வரிசையில் கடைசி ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

பஸில் தனது ஆசனத்தில் அமர்ந்துகொண்டபின் ஆளும்கட்சிக் கொறடாவான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவிப் பிரமாணம் செய்வது மிகவும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 4 | வெள்ளிக்கிழமை 21.09.2007 |
| திதி : நவமி | முற்பகல் 08.03 |
| நட்சத்திரம் : | பூராடம் மாலை 05.55 |
| சுபநேரம் | : 06.02 - 07.32 |
| ராகுகாலம் | : 10.32 - 12.02 |


## இனிமை பரவத் துணை செய்வது எது?

ஆத்ம தத்துவத்தை மறந்து விட்டார்கள். ஆத்ம விசுவாசம் என்ற தன்னம்பிக்கை காணாமற்போய் விட்டது. இவ்வுலகத்தை மட்டுமே நம்புகின்றார்கள். உலகத்தைக் காண்கின்றார்களே தவிர பிரபஞ்சமே தெய்வ வடிவம் என்பதை மறந்து விடுகிறார்கள்.

நீ காண்பதனைத்தும் தெய்வமே என்பதை நீ உணரவில்லையா? காட்சிகள் அனைத்தும் தெய்வ வடிவமே. அத்தகைய காட்சியே இல்லையென்றால் பார்வையிருந்து என்ன பயன்?

நீயே பார்க்கிறாய். அது பார்க்கப்படுவது. பார்ப்பதும் பார்க்கப்படுவதும் ஒன்றே. அதுவே ஆத்ம தத்துவம். இந்த ஒருமைத்தன்மை தான் உன்னுள் இனிமை பரவத் துணை செய்கிறது.

தாய் கூடத் தள்ளியிருக்கலாம். ஆனால் ஆத்ம தத்துவம் அவ்வாறில்லை. அனைத்தையும்விட அருகாமையில் இருப்பது ஆத்ம தத்துவமே. அனைவருக்கும் ஆத்ம தத்துவம் ஒன்றே.



இத்தகைய தத்துவத்தை நம்பாதவர் வேறெதனை நம்பப் போகிறீர்கள். என்னைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். நாளைய மனிதனுடைய சாதனைகள் அனைத்தும் பௌதிகமான, வெளிப்புறமான உலகியலைச் சார்ந்ததாகவே இருக்கின்றன.

தேகத்தைப் பற்றிய நினைவை விட்டொழிந்து மனதைப் பற்றி மறந்துவாழும் போதுதான் 'நான்' என்கிற தத்துவம் நமக்கு விளங்குகிறது.

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பம் கேட்டு மிரட்டுவோரைக் கைதுசெய்து சுமுக நிலைமையை விரைவில் கொண்டுவருவோம்

## பாதுகாப்புப் படையினர் தெரிவிப்பு

யாழ்ப்பணம், செப். 20

கப்பம் கேட்டுத் தொலைபேசியில் மிரட்டுவோரை விரைவில் கைதுசெய்து யாழ். பிரதேசத்தில் சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கும் படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படுவர்.

இவ்வாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பம் கேட்டுத் தொலைபேசியில் மிரட்டல்கள் விடுக்கப்பட்டால் யாழ்.பாதுகாப்பு படைகளின் தலைமையகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறியத்தருமாறு கோரப்பட்டுள்ளது.

நேற்றைய செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது. யாழ் குடாநாட்டில் தற்போது நிலவும் சுமுக நிலையை சீர்குலைப்பதற்கும் மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்துவதற்கும் சமூக விரோதிகள் திட்டமிட்ட முறையில் பல தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அதன் பிரகாரம் யாழ் பிரதேசத்தில் உயர்பதவிகளை வகிப்போருக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து கப்பம் கோரி அச்சுறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதானமாக யாழ். பிரதேசத்தில் பணியாற்றும் சட்டத்தரணிகளை இலக்காக கொண்டும் இவ்வாறு அச்சுறுத்தல் விடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சமூக விரோதிகளின் இவ்வாறான இழிவான அச்சுறுத்தல்களுக்கு நீங்கள் அடிபணியாதிருக்க வேண்டுமென்பதுடன், யாழ். மக்களுக்காக நீங்கள் ஆற்றும் உயர்வான சேவையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

தொடர்ந்து உங்களுக்கு அவ்வாறான தொலைபேசி அழைப்புகள் விடுக்கப்படுமாயின் யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தின் 021 - 222 9891, 021 - 222 9892 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவும் என்று உள்ளது. (அ)

# கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளார்

## தளபதி விநாயகம் தகவல்

படகு விபத்தொன்றில் காயமுற்ற கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை நலமடைந்து வருகிறார். காயத்துக்குச் சிகிச்சை பெற்று சுகமடைந்த அவர் இப்போது மீண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளார் கடற்புலிகளின் தளபதி விநாயகம்

கடற்புலிகளின் - பாகம் 11 தேசத்தின புயல் - 5 ஆகிய இறுவட்டுகளின் அறிமுக விழா நேற்று அமலன் அரங்கில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போதே தளபதி விநாயகம்மேற்கண்ட தகவலை தெரித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

சிறிலங்கா அரசு தமிழ் மக்களை குழப்பும் வகையில் பொய்களைப் பரப்புரை செய்து வருகின்றது.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தொடர்பில் பொய்ப்பரப்புரைகள் அரசாலும் அதன் ஊடகங்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

படகுப் பயிற்சி விபத்து ஒன்றில் கடற்புலிகளின் சிறப்பு தளபதி சூசை விழுப் புண் அடைந்தார். அவரின் மகன் அதில் உயிரிழந்தார். விழுப்புண்ணுக்கு சிகிச்சை பெற்று, இப்போது அவர் மீண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். இந்த அறிமுக நிகழ்வும் கூட கேணல் சூசை ஒழுங்கு செய்து அவரின் வழிநடத்தலில் தான் நடைபெறுகின்றது என்றார். (அ)

# தமிழர்கள் இருவர் பன்குளத்தில் கொலை

திருகோணமலை, மொறவெவ, பன்குளம் 6ஆம் வாய்க்கால் பகுதியில் இரு குடும்பஸ்தர்கள் நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். கதிரவேலுப்பிள்ளை பரமாணந்தம் (வயது - 52), கே. சுந்தரம் (வயது-50) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

காட்டில் மரம் வெட்டும் தொழில் செய்யும் இவர்கள் தொழில் நிமித்தம் காட்டுக்கு அண்மித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு சுமார் 9 மணியளவில் அப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் -

இதனையடுத்து நேற்றுக்காலை அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் வீட்டு முற்றத்தில் கிடந்த இருவருடைய சடலங்களையும் மீட்டனர் என்று தெரிவிக்கப்படுகின் றது.

## 2 1/2 மாதங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அரசு இப்போது பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அரசு நிதியைத் திரட்ட ஒருபுறம் பொருள்களின விலையை அதிகரித்துக்கொண்டு, மறுபுறம் பண நோட்டுகளையும் புதிதாக அச்சிடுகின்றது.

கடந்த இரண்டரை மாதங்களில் 3,500 கோடி ரூபா பணத்தை அரசு அச்சடித்துள் ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதைத் தடுத்தால் புதிதாக பணத்தை அச்சிட்டு புழக்கத்துக்கு விடுவதையும் பொருள்களின் விலை உயர்வதையும் தடுக்கலாம்.

இந்த நாணயத் தாள்கள் அச்சடிக்கப்பட்டும் கூட பொருள்களின் விலையேற்றம் குறையவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் வழங்கப்படவில்லை.

அச்சடிக்கப்பட்ட இந்த நாணயத்தாள்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. அரசு மக்களின் தேவைகளுக்காக அன்றி தனது அமைச்சர்களின் தேவைகளுக்காகவே இவ்வாறு நாணயத் தாள்களை அச்சடித்து வருகிறது.

இந்தியாவில் தற்போது பணவீக்கம் 4 வீதமாகவுள்ளது. ஆனால், இலங்கையில் அது 17 வீதத்தை விடவும் அதிகமாகவுள்ளது. அரசின் திறமையற்ற நிதி முகாமைத்துவமே இதற்குக் காரணம்.

இந்த நிலையில் கட்டுமட்டின்றி நாணயத்தாள்களை அச்சிட்டுப் புழக்கத்துக்கு விட்டால் உடனடி நிதி நெருக்கடியைச் சமாளிக்கலாம். ஆனால் அது மிக மோசமான - விபரீதமான - பொருளாதார வீழ்ச்சியையும் பின்னடைவையும் ஏற்படுத்திவிடும். - என்றார் அவர்.

## நாகர்கோவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதியில் ஊடுருவ முயன்ற புலிகள் தாக்குதல் தொடுத்த வேளையிலேயே இந்த மோதல் வெடித்ததாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த மோதலில் விடுதலைப் புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அனைத்து சமூகங்களின் அபிலாசைகளையும் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் அரசால் முன்வைக்கப்படுகின்ற தீர்வுத்திட்டம் அமையவேண்டும். தற்போது முன்னெடுக்கப்படுகின்ற சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற்பாட்டு முறைகள் இதற்கு சிறந்த வாய்ப்புகளை வழங்கும் என நினைக்கின்றேன்.

அனைத்து சமூகங்களினதும் தேவைகள் பூர்த்தி செய்யும் தீர்வுத்திட்டம் ஒன்றுக்கு அனைத்து கட்சிகளும் இணங்க வேண்டும் 'என்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பாகும் - என்றார். (சி)

## யாழ்.பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் எச்சரிக்கப்பட்டிருக்கின்றதாம்.

இத்துண்டுப் பிரசுரம் யாழ். பல்கலைக் கழக வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது. (சி)

## இலங்கைக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு தமது மனித உரிமை மீறல்கள் வெளி உலகத்தைச் சென்றடையவிடாமல் தடுத்து வருகிறது. இதற்காகப் பொய்யான பரப்புரைகளுக்கான தனது அனைத்து வளங்களையும் பயன்படுத்தி வருகிறது. சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தருகின்றபோது மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அமைச்சரவைச் சகாக்களும் தவறான தகவல்களையும் பிம்பத்தையும் உருவாக்குகின்றனர்.

மேலும் அனைத்துலக சமூகத்தின் கவலைகளை ஏற்காமல் இலங்கை அரசு இனப்படுகொலை மற்றும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இது ஒரு பயங்கரவாத அரசின் செயற்பாடாகவே இருக்கின்றது.

சில சர்வதேச அரசுகள் உண்மை நிலைகளை அறியாமல் இலங்கை அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு உதவுகின்றன. இது இந்த தீவில் இனமோதலை அதிகரிக்கத்தான் உதவும்.

ஆகையால் சர்வதேச சமுதாயமானது பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தானே நேரில் பார்வையிட்டு நிலைமைகளை அவதானிக்க வேண்டும் தரவுகளை தங்களது சொந்த வளங்களினூடாக சேகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். - என்றார்.(அ)

## பஸில் எம்.பியாகப் பதவியேற்ற...

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

புனிதமானதும் கௌரவத்திற்கும் உரிய விடயமாகும். அவ்வாறான ஒரு நிகழ்வு இடம்பெறும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இப்படியான ஒரு செய்கை யின் மூலம் புதிய உறுப்பினரை மட்டு மல்ல, இந்தச் சபையையும் அகௌரவப்படுத்தி விட்டனர் என்று அவர் கூறி னார்.

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பேசிக்கொண்டிருக்கும்போதே ஆளும் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சல் இட்டனர். சபை நடுவிற்கும் அவர்கள் வந்து விட்டனர். சபையில் குழப்பம் ஏற்பட்டது.

சபையில் கூச்சலும் குழப்பமும்

சபாநாயகர் அமைதியை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. எனவே ஆளும் கட்சிக் கொரடாவைத் தனது சகாக்களை கௌரவமாக நடந்துகொள்ள வழிநடத்தும்படி சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

இந்த வேளையில் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சபாநாயகர் மீதே பாய்ந்து விழுந்தார்.

'எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுலோக அட்டைகளுடன் எழுந்து நின்று சபையை அகௌரவப்படுத்தியபோது அவர்களை நீங்கள் கண்டிக்கவில்லை.

''கடந்த அமர்வு வேளையில் நிதித் திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உங்களுடைய ஆசனத்தை சுற்றிவளைத்தனர். உங்கள் கைகளில் இருந்த தஸ்தாவேஜுகளைப் பறித்துக் கொண்டு ஓடினார் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ரத்னதிலக. அவருக்கு எதிராக நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. இப்போது மட்டும் எம்மீது குற்றம் சுமத்துகின்றீர்கள்'' - என்று சபாநாயகர் மீதே குற்றம் சுமத்தினார் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

இவ்வாறு தர்க்கம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போதே அமைச்சர்களான மேர்வின் சில்வா, மஹிந்தானந்த அளுத்கமகே, தி. மு. தஸநாயக்க உட்படப் பலரும் எதிர்க்கட்சி ஆசனங்களை நோக்கிச் சென்று எதிரணியினரின் சுலோக அட்டைகளைப் பறிக்க முயன்றனர். அமைச்சர் ஜெயராஜ் அவர்களை உற்சாகப்படுத்தினார். இதனால் சபையில் அமைதி குலைந்தது.

இதனையடுத்து காலை 9.45 மணிக்கு சபை அமர்வுகளைப் பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்து விட்டு ஆசனத்தில் இருந்து எழுந்து சென்றார் சபாநாயகர்.

சபை ஒத்திவைக்கப்பட்ட பின்னரும் சபையில் அமைதி ஏற்படவில்லை. அமைச்சர் மேர்வின் சில்வா எதிர்க்கட்சி ஆசனங்களுக்குள் பலவந்தமாகச் சென்று அங்கே மேசைகளில் வைக்கப்பட்டிருந்த சுலோக அட்டைகளைப் பிய்த்து இழுத்தார். அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஒரு சுலோக அட்டையில் 'ஐந்துவீத கொமிஷன்' என எழுதி ஐ.தே. க. உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவின் மேசைக்கு முன் வைத்துவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த அட்டகாசங்களை சபாநாயகர் களரியில் இருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட பெருமளவு எண்ணிக்கையில் வந்திருந்த பிரமுகர்களும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.


புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

CB Computer Academy
Station Road, Kondavil. ☎:-021-4590291

Diploma in Computer Hardware 21.09.07 (Fri)
Diploma in Computerized Accounting 22.09.07 (Sat)

LICENSED SURVEYORS

To: All Licensed Surveyors Practicing in Jaffna

Application forms with relevant documents for obtaining License for the year 2008 are available.

Those who are interested can collect same from the address given below.

K.Kanagasabai (Chartered Surveyor),
Licensed Surveyor & Leveller,
No.125, Brown Road, Jaffna. Tel: 222-3906
125, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
(C/53731)

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc...

ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்

பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்

ஆரம்பம் :- 22,24.09.2007

Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

கணக்கீடு
திரு.P.பகீரதன்
A/L PAPER CLASS
SLAS - 5
இருப்பு மதிப்பீடு
Sat-Sun 10-11
ஆரம்பம் .09.2007
காலை 10 மணி
A/L 2008 11.00
2009 -800
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம்: 52,ஸ்ரான்லி வீதி யாழ்.

அளவையியல்
திரு.கமல்
A/L PAPER CLASS
ஆரம்பம் 22.09.2007
சனி 11.00 மணி
A/L 2008 8 மணி
2009 -9 மணி
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம்: 52,ஸ்ரான்லி வீதி யாழ்.

அனைத்து மாணவர்களுக்கான
காலை, மாலை நேர
கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்
Start On :- 22.09.2007
மேலதிக விபரங்களுக்கு நேரில்
Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி. - யாழ்ப்பாணம்.
2008 A/L WEEKEND PAPER CLASS
2007 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது
Sat & Sun
Phy - Mr. சோதிலிங்கம் 7.00 - 8.00
Che - Mr. மகேஸ்வரன் 8.00 - 9.30
Phy - Mr. குகன் 9.30 - 11.00
Bio - Mr. கெங்காதரன் 11.00 - 12.30
ஆரம்பம் 22.09.2007 Sat
DAY CLASS Mon to Friday 07.00 - 11.30
நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.